1987 நவம்பர் 17]

நெடுஞ்சாலைகளில் சோதனைச் சாவடிகள்.

168—(*வினா எண் 14009) திரு. த. பழனி: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்னை-பெங்களூர் நெடுஞ்சாலையில் பூந்தமல்லி, இராணிப் பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய சோதனைச் சாவடிகளில் லாரிகள் நிற்பதினால் ஏற்படும் இடைஞ்சலைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய சோதனைச் சாவடி அமைந்துள்ள இடங்களில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், விரைவு நடவடிக்கை மேற்கொள்ளவும், இருவழி வண்டிகளுக்கு தனித் தனியாகச் சோதனைச் சாவடிகள் அமைப்பது அவசியமென்று உணரப்பட்டு படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

1986-87 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின் கீழ் ஆணை வழங்கப்பட்டு இருவழிச் சோதனைச் சாவடிகள் 2-7-1986 முதல் பூவிருந்தவல்லியிலும், ஒசூரிலும் (கிருஷ்ணகிரி) இயங்கி வருகின்றன.

1986-87 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டத்தின்கீழ் ஆணை பேட்டையில் இருவழிச் சோதனைச் சாவடி அமைக்க ஆணை யிடப்பட்டுள்ளது.

அரசுக்குக் கிடைத்த வணிகவரி.

169—(*வினா எண் 14311) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86, 1986-87 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசுக்குக் கிடைத்த வணிகவரி எவ்வளவு?

(ஆ) கூடுதல் வரி எவ்வளவு?

[1987 நவம்பர் 17

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசுக்குக் கிடைத்த வணிகவரி—

1985-86-ல் ரூ. 1,035.13 கோடி.

1986-87-ல் ரூ. 1,172.44 கோடி.

(ஆ) கூடுதல் வணிக வரி—

1985-86-ல் ரூ. 99.11 கோடி.

1986-87-ல் ரூ. 105.22 கோடி.

அரிச்சந்திரா நதியில் படுக்கை அணை.

170—(*வினா எண் 11909)—திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், தலைஞாயிறு பகுதியில் அரிச்சந்திரா நதியில் ஒரு பெட் டேம் (Bed Dam) கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது அரசின் பரிசீலனையில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

அணைக்கரை கொள்ளிடத்தில் புதிய கால்வாய் வெட்டுதல்.

171—(*வினா எண் 12061) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுக்கா அணைக்கரை கொள்ளிடத்தில் இருந்து புதிய கால்வாய் வெட்டி மண்ணியாற்றில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தாலுக்கா அணைக்கரை கொள்ளிடத்திலிருந்து புதிய கால்வாய் வெட்டி மண்ணியாற்றில் இணைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.